OCEAN NETWORK EXPRESS

Ocean Network Express Lanka (Pvt) Ltd.
349 8/1, Galle Road,
Colombo 03,
Sri Lanka.
Tel: +94 112 301 767
www.one-line.com

இலத்திரனியல் விநியோகக் கட்டளையைப் பின்பற்றுதல் (2020 ஏப்பிரல் 17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது)

மதிப்புமிக்க வாடிக்கையாளருக்கு,

சமூக இடைவெளியைப் பேணுவது பற்றிய அரசாங்கத்தின் பணிப்புரைகளை உறுதிப்படுத்தும் நோக்கில், உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் சரக்கு விநியோகத்திற்கான கொழும்பு துறைமுகத்தின் அனைத்து முனையங்களிலும் தற்போது இலத்திரனியல் விநியோகக் கட்டளை (E-D/O) பயன்படுத்தப்படுகின்றது.

இந்தப் பணிப்புரைகளுக்கமைவாக, நாம், 2020 ஏப்பிரல் 17 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எமது அலுவலகத்தின் முன் கரும பீடங்களில் விநியோகக் கட்டளைகளைக் கையாளமாட்டோம்.

இலத்திரனியல் விநியோகக் கட்டளையைப் பெறுவதற்கான செயல்முறை பின்வருமாறு:

1. விபரப்பட்டியல்

- கப்பலிருந்து சரக்கு இறக்கப்பட்டமை பற்றிய விலைப்பட்டியல்களில் (bills of lading) உள்ளவாறு, வருகை பற்றிய அறிவித்தலை தெரியப்படுத்தும் தரப்பினர்களுக்கான (notify party) வருகை பற்றிய அறிவித்தல்களுடனான விபரப்பட்டியல்கள் உங்களுக்கு மின்னஞ்சல் செய்யப்படும். வருகை பற்றிய அறிவித்தலை தெரியப்படுத்தும் உங்களின் தரப்பினரின் தகவல்கள் சரியானவை என்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- மேலதிக விசாரணைகளுக்கு தயவுசெய்து **lk.onelinepayment@one-line.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும் அல்லது 94 11 2374659, 94 11 2374660 / 94 11 2374658 என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொள்ளவும்.

2. கொடுப்பனவு

- **CEFT யில் 'றியல் ரைம்' வங்கிப் பரிமாற்றம்**
- **'றியல் ரைம்' (CEFT) பரிமாற்றத்தினூ**டாகச் செலுத்துவதற்கு
    - **ஹொங்கொங் அண்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேஷன்**
    - **வங்கிக் குறியீடு : 7092**
    - **கிளை : தலைமை அலுவலகக் கிளை**
    - **கிளைக் குறியீடு : 001**
    - **விரைவான குறியீடு: HSBCLKLX**
    - **கணக்கு இல. : 001535798002**

- பரிமற்றத்திற்கான தொடர்பு இலக்கமாக "வாடிக்கையாளரின் பெயரை" தயவுசெய்து உள்ளீடு செய்யவும். (தொடர்பு பகுதியில் வாடிக்கையாளரின் பெயர் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பத்தில், *HSBC* யிடமிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே பற்றுச்சீட்டு வழங்கப்படும் என்பதுடன் இது ஆவணங்களை விடுவிப்பதனை காலதாமதமாக்கக்கூடியது).

  கொடுப்பனவை உறுதிப்படுத்துதல் – பணப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டவுடன், கொடுப்பனவின் உறுதிப்படுத்தல் மற்றும் முழுமையான ஆவணங்களுடன் e-DO இற்கான வேண்டுகோளை, **திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை** (**விடுமுறை நாட்கள் தவிர்த்து**) **பி.ப. 3 மணிக்கோ அல்லது அதற்கு முன்னராகவோ** **lk.onelinepayment@one-line.com** இற்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அதன்

Ocean Network Express Lanka (Pvt) Ltd.
349 8/1, Galle Road,
Colombo 03,
Sri Lanka.
Tel: +94 112 301 767
www.one-line.com

பின்னர் ஏதேனும் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டால், அவற்றினை அடுத்த வேலை நாளில் நாம் கவனத்தில்கொள்வோம்.

e-DO இனை அனுப்புவதற்கு அல்லது மீள்-செல்லுபடியாகும் காலம் பற்றித் தெரிவிப்பதற்கு எமக்குத் தேவையான மின்னஞ்சல் முகவரியினை FCL பிணைப் பொறுப்புப் படிவத்தில் தயவுசெய்து குறிப்பிடவும்.

அ. விடயம் : BL இலக்கம் .... இற்குரிய இணையம் மூலமான கொடுப்பனவுகள்
ஆ.செலுத்துபவரின் பெயர் (செலுத்தும் தரப்பின் பெயர்) :
இ.செலுத்தப்பட்ட தொகை :
ஈ.பரிமாற்றம் செய்கின்ற வங்கியின் பெயர் மற்றும் பரிமாற்றத்தின் பற்றுச்சீட்டினை இணைத்தல் :
உ. BL இலக்கங்கள் :
ஊ. விநியோகக் கட்டளையின் செல்லுபடியாகும் திகதி (விநியோகக் கட்டளை நீடிப்புக்காக மட்டுமே பிரயோகிக்கத்தக்கது) :
எ.குளிரூட்டப்பட்ட கொள்கலன் என்றால், குளிரூட்டப்பட்ட கொள்கலனுக் கான திகதியை வழங்குதல் :
ஏ.கிடைக்கப்பெற்றால், வங்கியின் தொடர்பிலக்கம்:

3. கப்பலிலிருந்து சரக்கு இறக்கப்பட்டதற்கான கடல் வழி விலைப்பட்டியல் மற்றும் ஒப்படைப்பு விலைப்பட்டியலுக்கான விநியோகக் கட்டளை

- மேலேயுள்ள "கொடுப்பனவு உறுதிப்படுத்தலுடன்" இணைத்து பின்வருகின்ற ஆவணங்களையும் தயவுசெய்து மின்னஞ்சல் செய்யவும்.

அ. கப்பலிலிருந்து சரக்கு இறக்கப்பட்டதற்கான விலைப்பட்டியலின் பிரதி

ஆ.விநியோகக் கட்டளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி மற்றும் பெறுபவரின் தொடர்பிலக்கம் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற FCL பிணைப்பொறுப்புக் கடிதம்.

இ.விநியோகக் கட்டளையை மின்னஞ்சலில் பெறவுள்ள ஆளின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.

ஈ. மேலுள்ள ஆள் விநியோகத்தை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றார் என்று பொருட்கள் சேர்ப்பிக்கப்பட வேண்டியவரிடமிருந்து (consignee) கடித மொன்று.

4. கப்பலுக்கு சரக்கு இறக்கப்பட்டதற்கான மூல லைப்பட்டியலினைச் சமர்ப்பிப்பதன் பேரிலான விநியோகக் கட்டளை.

- பின்வருகின்ற ஆவணங்களைக் கொண்டிருக்கின்ற மூடப்பட்ட பொதியினை (sealed package) தயவுசெய்து 'வண் லங்கா' அலுவலகத்தில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் விநியோகிக்கவும்.
அ. கொடுப்பனவை உறுதிசெய்கின்ற பற்றுச்சீட்டு

ஆ. கப்பலிலிருந்து சரக்கு இறக்கப்பட்டதற்கான மூல விலைப்பட்டியல்

Ocean Network Express Lanka (Pvt) Ltd.
349 8/1, Galle Road,
Colombo 03,
Sri Lanka.
Tel: +94 112 301 767
www.one-line.com

இ. விநியோகக் கட்டளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி மற்றும் பெறுபவரின் தொடர்பிலக்கம் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற FCL பிணைப்பொறுப்புக் கடிதம்.
ஈ. விநியோகக் கட்டளையை மின்னஞ்சலில் பெறவுள்ள ஆளின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
உ. மேலுள்ள ஆள் விநியோகத்தை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றார் என்று பொருட்கள் சேர்ப்பிக்கப்படவேண்டியவரிடமிருந்து (consignee) கடித மொன்று.

- பொதியின் வெளிப்புறத்தில் பின்வரும் தகவல்களை தயவுசெய்து எழுதவும் / அச்சிடவும்.
  அ. பொருட்கள் சேர்ப்பிக்கப்படவேண்டியவரின் பெயர்.

  ஆ.ஆவணத்தை அனுப்புகின்ற ஆட்களின் பெயர் / தொடர்பு இலக்கம் / தேசிய அடையாள அட்டை இலக்கம்.

- வண் லங்கா' அத்தகைய பொதிகளை CCTV கமறா முன்னிலையில் மட்டுமே திறக்கும் என்பதுடன், தேவைப்படுத்தப்பட்ட BL சான்றுப்படுத்தல்கள் மற்றும் ஆவணத்தின் உணமைத்தன்மையின் சான்றுரைக்கு அமைவாகவே விநியோகத்தை மேற்கொள்ளும்.

5. உற்பத்திப்பொருளுக்கு கப்பலில் சரக்கு றக்கப்பட்டதற்கான மூல விலைப் பட்டியல் கிடைக்கப்பெறும் வரை வங்கிப் பிணைப் பொறுப்பு மீதான விநியோகக் கட்டளை

- அத்தகைய விநியோகம் கட்டாயமாக பொருட்களை ஏற்றிச்செல்பவரின் தற்றுணிபின் பேரிலேயே மேற்கொள்ளப்படும்
- வங்கியின் பிணைப் பொறுப்பு ஆவணத்தின் ஸ்கான் பிரதியை தயவுசெய்து lk.impdocs@one-line.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

  - இது வங்கிப் பிணைப்பொறுப்பு ஒழுங்காக இருக்கின்றது என்பதை முன்கூட்டியே தெளிவுபடுத்துவதற்கானது.

- பின்வருகின்ற ஆவணங்களைக் கொண்டிருக்கின்ற மூடப்பட்ட பொதியினை (sealed package) தயவுசெய்து 'வண் லங்கா' அலுவலகத்தில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் விநியோகிக்கவும்.

  அ. கொடுப்பனவை உறுதிசெய்கின்ற பற்றுச்சீட்டு

  ஆ. பூரணமாக நிரப்பப்பட்ட வங்கி உத்தரவாதம்

  இ. வர்த்தக விபரப்பட்டியலின் பிரதி

  ஈ. விநியோகக் கட்டளை அனுப்பப்பட வேண்டிய மின்னஞ்சல் முகவரி மற்றும் பெறுபவரின் தொடர்பிலக்கம் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற FCL பிணைப்பொறுப்பின் மூலப்பிரதி.

  உ. விநியோகக் கட்டளையை மின்னஞ்சலில் பெறவுள்ள ஆளின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.

  ஊ.மேலுள்ள ஆள் விநியோகத்தை எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக் கின்றார் என்று பொருட்கள் சேர்ப்பிக்கப்படவேண்டியவரிடமிருந்து (consignee) கடிதமொன்று.

- பொதியின் வெளிப்புறத்தில் பின்வரும் தகவல்களை தயவுசெய்து எழுதவும் / அச்சிடவும்.
  அ. பொருட்கள் சேர்ப்பிக்கப்படவேண்டியவரின் பெயர்.

ஆ.ஆவணத்தை அனுப்புகின்ற ஆட்களின் பெயர் / தொடர்பு இலக்கம் / தேசிய அடையாள அட்டை இலக்கம்.

- ‘வண் லங்கா’ அத்தகைய பொதிகளை CCTV கமறா முன்னிலையில் மட்டுமே திறக்கும் என்பதுடன், தேவைப்படுத்தப்பட்ட BL சான்றுப்படுத்தல்கள் மற்றும் ஆவணத்தின் உணமைத்தன்மையின் சான்றுரைக்கு அமைவாகவே விநியோகத்தை மேற்கொள்ளும்.
- **வங்கியின்** பிணைப்பொறுப்பினை இரத்துச்செய்கின்ற செயன்முறையில் தற்போது மாற்றமில்லை.

6. <u>விநியோகக் கட்டளையை நீடித்தல் (D/O) / செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல்</u>

- கட்டாயமாக மின்னஞ்சலினூடாக அனுப்பப்பட்ட செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கும் கடிதம்.
- தயவுசெய்து மேலுள்ள 1 & 2 இனைப் பின்பற்றுங்கள்.
- கொடுப்பனவு உறுதிப்படுத்தலுடன் (படிநிலை 2) ,
    - விநியோகக் கட்டளையை எத்தனையாம் திகதி வரை நீடிக்கவேண்டு மென்பதைத் தயவுசெய்து குறிப்பிடவும்.
    - அத்துடன், ஆவணம் மின்னஞ்சல் செய்யப்பட வேண்டிய மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிடுகின்ற FCL பிணைப்பொறுப்புக் கடிதத்தின் பிரதியையும் இணைக்கவும்.